# திருப்பூர் மண்டலம்

## கூடலூர் நகராட்சி(கோ)

## 2022 – 2023 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

**1 . அமைப்பும் நிர்வாகமும் :**

கூடலூர் நகரம் கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழியில் அமைந்துள்ளது. ஊராட்சியாக இருந்து அரசாணை எண்.84/A/ 64–65 நாள். 15.04.1966 ன் படி இரண்டாம் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப் பட்டு, அரசாணை 205575/70 நாள். 15.12.1970ன் படி முதல் நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப் பட்டது. மீண்டும் அரசாணை எண்.2774/82/மு5 நாள்.04.02.1982ன் படி தேர்வு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, அரசாணை எண்.141 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ1), நாள்.21.11.2014ன் படி சிறப்பு நிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, அரசாணை எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.07.12.2021ன் படி இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்வு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 29.98 சதுர கிலோ மீட்டர், இவ்வாண்டில் பரப்பளவில் மாறுதல் ஏதுமில்லை. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரத்தின் மக்கள் தொகை 38859. இதில் ஆண்கள் 19707 பேர்களும், பெண்கள் 19152 பேர்களும் உள்ளனர். தற்போதைய மக்கள் தொகை 52842 ஆகும்.

அ) தமிழ்நாடு அரசு ஆணை எண்.127 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள்:16.12.2021-ன்படி இந்நகராட்சி 2011ம் வருடத்திய மக்கள் தொகை அடிப்படையில் 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசாணை எண்.06, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள்: 10.01.2022ன்படி மொத்தம் 27 வார்டுகளில் வார்டு எண். 23 வார்டு SC(G) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான பொது வார்டுகளாகவும், வார்டு எண். 07 SC(W) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான பெண்கள் வார்டுகளாகவும், பொது பெண்களுக்கென வார்டுகளாக 1,2,3,4,5,8,10,13,14,19,22,25, 26 ஆகிய 13 வார்டுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன.

**நிர்வாகம் :**

திருமதி.த.விஜயா அவர்கள் 01.04.2022 முதல் 24.04.2022 வரையிலும் நகராட்சி ஆணையாளராகவும், 06.05.2022 முதல் திரு.கி.பால்ராஜ் அவர்கள் நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) ஆகவும், நகர்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று 04.03.2022 முதல் திரு.அ.அறிவரசு அவர்கள் நகர்மன்றத் தலைவராகவும், திருமதி.ரதி ராஜேந்திரன் அவர்கள் துணைத்தலைவராகவும் மற்றும் 25 நகரமன்ற உறுப்பினர்கள் கொண்டு நகர்மன்றம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**மேலாளர் :**

பணியிடம் காலியாக உள்ளது.

**கணக்கர் :**

பணியிடம் காலியாக உள்ளது.

**நகரமைப்பு ஆய்வர் :**

பணியிடம் காலியாக உள்ளது.

திரு.என்.பழனிசாமி, நகரமைப்பு ஆய்வர் **25.01.2022** முதல் நாளது வரை கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வருகிறார்.

**நகராட்சிப் பொறியாளர் :**

பணியிடம் காலியாக உள்ளது.

திரு.சிவக்குமார் அவர்கள் **28.12.2021** முதல் **15.09.2022** வரை நகராட்சி பொறியாளராக கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வந்தார்.

திருமதி.கவிதா அவர்கள் **18.10.2022** முதல் நாளது வரை நகராட்சி பொறியாளராக கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வருகிறார்.

**உதவிப் பொறியாளர் :**

பணியிடம் காலியாக உள்ளது.

**2.தேர்தல்கள் :**

அறிக்கை ஆண்டில் கீழ்கண்டவாறு நகர்மன்றக் கூட்டங்கள் நடைபெற்றன.

| கூட்டம் | கூட்டங்களின் எண்ணிக்கை | மன்றப் பொருள்கள் |
|---|---|---|
| சாதாரணக்கூட்டம் | **12** | **167** |
| அவசரக்கூட்டம் | **7** | **17** |
| சிறப்புக்கூட்டம் | – | – |
| **மொத்தம்** | **19** | **184** |

**3. குழுக்கள் :**

1) ஒப்பந்தக்குழு உறுப்பினர் – திரு.முருகானந்தன் எம், **24**வது வார்டு உறுப்பினர்
2) நியமனக்குழு உறுப்பினர் - திருமதி.மணிமேகலை.எம்,**4**வது வார்டு உறுப்பினர்
3) வரிமேல் முறையீட்டு குழு உறுப்பினர்கள் – **1)** திருமதி.க.மீனா , **12**வது வார்டு உறுப்பினர், **(2)** திரு.ஜெ.பொன்மாடசாமி, **15**வது வார்டு உறுப்பினர், **(3)**திருமதி.தீ.ரேகா., **22**வது வார்டு உறுப்பினர், **(4)** திரு.ஆர்.ராகுல், **23**வது வார்டு உறுப்பினர்

**4. உள்ளூர் திட்ட குழுமம்**

உள்ளூர் திட்ட குழுமம் கூடலூர் நகராட்சியில் ஏதும் இல்லை.

**5. மேலாளுகை :**

| | | | |
|---|---|---|---|
| 1 | உதவியாளர் (Class V) | 1 | – |
| 2 | இளநிலை உதவியாளர் (Class VII) | 5 | – |
| 3 | பதிவறை எழுத்தர் | 1 | – |
| 4 | அலுவலக உதவியாளர் | 3 | 2 பணியிடம் காலி |
| 5 | தட்டச்சர் | 1 | 1 பணியிடம் காலி |

**வருவாய்த்துறை பிரிவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் விபரம் பின்வருமாறு :**

| வ. எண் | பணியிட விபரம் | மொத்தப் பணியிடம் | காலிப்பணியிடம் |
|---|---|---|---|
| 1 | வருவாய் ஆய்வர் (Class V) | 1 | காலிப்பணியிடம் இல்லை |
| 2 | வருவாய் உதவியாளர் | 3 | காலிப்பணியிடம் இல்லை |

நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டமைக்கு உரிய பணியாளர்கள் நியமிக்க அரசிடம் கோரப்பட்டுள்ளது.

**6. வழக்குகள் :**

அறிக்கை ஆண்டில் 1 (NGT Case) வழக்கு நிலுவையில் உள்ளன.

**7. பொறியியல் பிரிவு :**

| | | | |
|---|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் (Grade-III) | 1 | 1 பணியிடம் காலி |
| 2 | பொதுப்பணி ஒவர்சீர்ஸ் | 1 | 1 பணியிடம் காலி |
| 3 | டிராப்ட்ஸ்மேன் (Grade-III) | 1 | 1 பணியிடம் காலி |
| 4 | பணி ஆய்வர் | 2 | 2 பணியிடம் காலி |
| 5 | மின்பணியாளர் (Grade-II) | 1 | 1 பணியிடம் காலி |
| 6 | பிட்டர் (Grade-II) | 1 | – |

நகராட்சிப்பொறியாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர் ஆகியோர் கட்டிடங்கள் சாலை, பொது வேலைகள், குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்கு ஆகியவைகளையும் கவனித்து வருகின்றனர்.

பொதுச்சுகாதாரம் மற்றும் நகரமைப்பு தலைப்புகளின் கீழ் வராத இதர வேலைகள் நீர் வழங்குதல், சாக்கடைத் திட்டமும் மற்றும் பொதுப்பணி கட்டிடங்கள், சாலைகள் ஆகிய முக்கிய வேலைகளை பொறியாளர் (கூடுதல் பொறுப்பு) மேற்பார்வை செய்து வருகிறார்.

**(அ) சாலைகள் :**

நகராட்சி எல்லைக்குள் பெரிய சாலைகள் ஏதுமில்லை. நடப்பு ஆண்டில் கீழ்க்கண்டுள்ள சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினரின் நிர்வாகத்தில் உள்ளன.

| | | |
|---|---|---|
| கோயமுத்தூர் | : | கோவை-மேட்டுப்பாளையம் சாலை |
| கூடலூர் | : | தேவையம்பாளையம் சாலை |
| கூடலூர் | : | பாலமலை ரோடு |
| கூடலூர் | : | சாமிசெட்டிபாளையம் |
| கூடலூர் | : | ஏ.வி.பி பள்ளி முதல் தெக்குப்பாளையம் |

**நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள் பற்றிய விபரம் :**

| | | |
|---|---|---|
| 1 | சிமெண்ட் கான்கிரீட் | **13.801** கி.மீ |
| 2 | தார் சாலை | 113.499 கி.மீ |
| 3 | பேவர் பிளாக் | 0.395 கி.மீ |
| 4 | மண்சாலை | 22.073 கி.மீ |
| | மொத்தம் | **149.768 கி.மீ** |

இந்நகராட்சியில் மொத்தம் **1055** எண்ணிக்கையில் சாலைகள் உள்ளன.

**(ஆ) வடிகால்**

இந்நகராட்சியில் **37.400** கி.மீ நீளத்தில் வடிகால் அமைந்துள்ளது.

**(இ) பாலங்கள் :**

2022 – 2023 ஆம் ஆண்டில் பாலங்கள் ஏதும் கட்டப்படவில்லை.

**(ஈ) சிறுபாலங்கள் :**

இந்நகராட்சியில் **247** சிறுபாலங்கள் உள்ளன.

**8. விளக்குகள் :**

நகராட்சி மூலம் தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட தெரு மின்விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| **வ.எண்** | **விபரம்** | **2022–2023** |
|---|---|---|
| **1** | குழல் விளக்குகள் | 855 |
| **2** | சி.எப்.எல் விளக்குகள் | 152 |
| **3** | எல்.இ.டி. விளக்குகள் | 1662 |
| **4** | Highmast | 4 |
| | **மொத்தம்** | **2673** |

**9. குடிநீர்த்திட்டம் :**

பில்லூர் குடிநீர் திட்டம் மூலம் தற்போது நாள் ஒன்றுக்கு, **90** இலட்சம் லிட்டர் சுத்தம் செய்யப்பட்ட தண்ணீர் நகருக்கு தடையின்றி விநியோகம் செய்யப்படுகிறது. நகராட்சியில் அனைத்துப்பகுதிகளிலும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**குடிநீர் விநியோகம் :**

இந்நகராட்சிக்கு பில்லூர் அணை நீரை ஆதாரமாக கொண்டு **2001–2002** ஆண்டு முதல் அத்திக்கடவு முதல் கூட்டு குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. முதல் குடிநீர் திட்டத்தில் **1.60** MLD நீரானது வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. மேலும், இரண்டாவது குடிநீர்த் திட்டம் **2013–2014**ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டு **1.60** MLD அளவு குடிநீர் வழங்கப்பட்டு விநியோகம் செய்யபபட்டு வருகிறது. தற்போது **3.50** MLD குடிநீர் அத்திக்கடவு திட்டத்தின் மூலம் பெறப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. **2011**

மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 90LPCD வீதம் 5.5 MLD குடிநீரானது தற்போது விநியோகிக்கப்படுகிறது. வெள்ளியங்காடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Rapid sandfilter மூலம் குடிநீரானது சுத்தம் செய்யப்பட்டு அத்திக்கடவு கூட்டு குடிநீர்த் திட்டம் வாயிலாக 5.5 MLD குடிநீர் 7 இடங்களில் பெறப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

1. திருமலைநாயக்கன்பாளையம் பகுதியில் 2மீ விட்டம் கான்கிரீட் பைப் மூலம் பெறப்படும் குடிநீரானது 3 கி.மீ தொலைவில் உள்ள செல்வபுரம் பகுதியில் அமைந்துள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டிக்கு 140 எம்.எம். சி.ஐ. பிராதான குழாய் மூலமாகவும்

2. திருமலைநாயக்கன்பாளையம் பகுதியில் 500 மீ தொலைவில் உள்ள 1,60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கு 140 எம்.எம். சி.ஐ. பிராதான குழாய் மூலமாகவும் குடிநீர் பெறப்பட்டுவருகிறது.

3. வீரபாண்டி பிரிவு முதல் கணேஷ் நகர் பகுதியில் 3 கி.மீ தொலைவில் உள்ள 1,20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கு 75 எம்.எம் சி.ஐ. பிராதான குழாய் மூலமாகவும்,

4. வண்ணான்கோவில் முதல் சாமிசெட்டிபாளையம் பகுதியில் 1.7கி.மீ தொலைவில் உள்ள 2,50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கும் மற்றும் கூ.கவுண்டம்பாளையம் பகுதியில் 3 கி.மீ தொலைவில் உள்ள 1,50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கும் 140 எம்.எம் சி.ஐ. பிராதான குழாய் மூலமாகவும்,

5. பெரியநாயக்கன்பாளையம் முதல் 1.4 கி.மீ தொலைவில் உள்ள அண்ணா நகர் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கு 140 எம்.எம் சி.ஐ. பிராதான குழாய் மூலமாகவும்,

6. மாணிக்கவாசக நகர் முதல் அப்பகுதியில் 1 கி.மீ தொலைவில் உள்ள 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கும் மற்றும் தேவையம்பாளையம் பகுதியில் 3 கி.மீ தொலைவில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கும் 110 எம்.எம். பிரதான குழாய் மூலமாகவும்,

7. கேஸ் கம்பெனி முதல் விவேகானந்தா நகர் பகுதியில் 200 மீ தொலைவில் உள்ள 1,10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கு 90 எம்.எம் சி.ஐ. பிராதான குழாய் மூலமாகவும்,

8. மேட்டுப்பாளையம் மெயின் ரோடு முதல் தெக்குப்பாளையம் பகுதியில் 1 கி.மீ தொலைவில் உள்ள 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கும் 110 எம்.எம். பிரதான குழாய் மூலமாகவும்,

9. கே.எஸ்.பி கம்பெனி முதல் தபால் தந்தி காலனி பகுதியில் 600 மீ தொலைவில் உள்ள 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கும் 75 எம்.எம். பிரதான குழாய் மூலமாகவும்,

10. நரசிம்ம நாயக்கன்பாளையம் பேருந்து நிறுத்தம் முதல் இராவத்தக்கொல்லனூர் பகுதியில் 2 கி.மீ தொலைவில் உள்ள 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டிக்கும் 60 எம்.எம். பிரதான குழாய் மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் தரைமட்ட தொட்டி விபரம்**

| வ. எண் | மேல்நிலைத்தொட்டி அமைந்துள்ள இடம் | பில்லூர் குடிநீர் திட்டம் | |
|---|---|---|---|
| | | மேல்நிலைத் தொட்டி / தரைமட்ட தொட்டி கொள்ளளவு (லிட்டரில்) | விநியோகம் செய்யப்படும் குடிநீர் அளவு |
| 1 | செல்வபுரம் | 30000 | 295000 |
| 2 | திருமலைநாயக்கன்பாளையம் | 160000 | 575000 |
| 3 | சாமிசெட்டிபாளையம் | 250000 | 925000 |
| 4 | மாணிக்கவாசக நகர் | 100000 | 825000 |
| 5 | தெக்குப்பாளையம் | 100000 | 340000 |
| 6 | தேவையம்பாளையம் | 30000 | 325000 |
| 7 | கூ.கவுண்டம்பாளையம் | 150000 | 525000 |
| 8 | அண்ணா நகர் | 120000 | 270000 |
| 9 | விவேகானந்தா நகர் | 110000 | 310000 |
| 10 | தபால் தந்தி காலனி | 50000 | 310000 |
| 11 | இராவுத்தக்கொல்லனூர் | 50000 | 100000 |
| 12 | அண்ணா நகர் (தரைமட்ட தொட்டி) | 100000 | 430000 |
| 13 | கணேஷ் நகர் (தரைமட்ட தொட்டி) | 100000 | 270000 |
| | மொத்தம் | **1350000** | **5500000** |

**பொதுக்குழாய்கள் :**

பொதுக்குழாய் : 185

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்காக 185 எண்ணிக்கையிலான பொது குடிநீர்க் குழாய்களும் உள்ளது.

அறிக்கையாண்டில் நாள் ஒன்றுக்கு 5.50 எம்.எல்.டி. குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு அறிக்கையாண்டில் மக்கள் தொகை அடிப்படையில் 90 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகளுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.150/- வணிக இணைப்புகளுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.300/- மற்றும் தொழிற்சாலை இணைப்புகளுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.400/- நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

குடிநீர் விநியோக தட்டுப்பாட்டைத் தவிர்க்க ஆழ்குழாய் கிணறுகள் போடப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

**31.03.2022** முடிய கீழ்க்கண்டவாறு வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| **1)** வீட்டு குடிநீர் இணைப்பு | - | 12044 |
| **2)** வணிக இணைப்பு | - | 59 |
| **3)** தொழிற்சாலை | - | 29 |
| **மொத்தம்** | **-** | **12132** |

**10. வடிகால் :**

இந்நகராட்சியில் **37.400** கி.மீ மழைநீர் வடிகால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**11. போக்குவரத்து :**

நகராட்சி மூலம் போக்குவரத்து பராமரிக்கப்படுவதில்லை. இந்நகரில் மற்ற இடங்களுக்கு செல்ல அநேக தனியார் பேருந்துகள் இருப்பதாலும் மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழக பேருந்துகள் அதிகமாக இயக்கப்படுவதாலும் பொதுமக்களுக்கு பிரயாண வசதிக்கு யாதொரு இடர்பாடும் இல்லை.

**12. ஆசிரியர்கள் :**

நகராட்சி பள்ளிகளின் நிர்வாக பொறுப்புகள் **01.04.90** முதல் கல்வித்துறை இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றது.

**13. இடவசதியும், உபகரணங்களும் :**

நகராட்சி மூலம் பள்ளிகள் பராமரிக்கப்படுவதில்லை.

**14. உயர்நிலைக்கல்வி :**

நகராட்சி மூலம் பள்ளிகள் பராமரிக்கப்படுவதில்லை.

**15. நூலகங்கள் :**

தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் இரண்டு நூலகங்கள் இயங்குகின்றன. (**1.**புதுப்புதூர் **2.**நேருநகர், சாமிசெட்டிபாளையம்)

**16. பொது வானொலி கருவிகள் :**

பொது வானொலிக் கருவிகள் ஏதும் இந்த ஆண்டில் பராமரிக்கப்படவில்லை. அதற்கு இந்த ஆண்டு செலவு ஒன்றும் செய்யப்படவில்லை.

**17. பொதுச்சுகாதாரம் :**

கூடலூர் நகராட்சி பயன்பாட்டில் மருந்தகங்கள் ஏதும் பராமரிக்கப்படுவதில்லை.

**அமைப்பும் நிர்வாகமும் :**

சுகாதாரப்பிரிவுக்கு அனுமதிக்கப்பட்டு தற்போது இயக்கத்திலுள்ள பணியிடங்கள்

| | | |
|---|---|---|
| சுகாதார ஆய்வாளர் | 1 | – |
| கள உதவியாளர் | 1 | 1 பணியிடம் காலியாக உள்ளது |
| துப்புரவு மேற்பார்வையாளர் | 4 | 4 பணியிடம் காலியாக உள்ளது |
| தூய்மைப் பணியாளர் | 15 | – |

**சுகாதாரமும், பொதுக்கழிப்பிடங்களும் :**

இந்நகராட்சியில் மொத்தம் **14761** வீடுகள் மற்றும் **688** வணிக நிறுவனங்கள் உள்ளன. கழிப்பறைகளுடன் கூடிய வீடுகளின் எண்ணிக்கை சென்ற ஆண்டில் **13,916** மீதமுள்ள வீடுகளில் உள்ள நபர்கள் நகராட்சி வார்டு பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்ளை பயன்படுத்தி வருகின்றனர். நகரிலுள்ள 27 வார்டுகளிலும் நிரந்தரப் பணியாளர்கள் மற்றும் சுய உதவிக்குழு பணியாளர்கள் அமர்த்தி அவரவர்கள் இல்லங்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் உண்டாகும் குப்பைகளை தள்ளுவண்டிகளில் சேகரிக்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. நகரில் அனைத்து வார்டுகளிலும் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் இடத்தில் உரம் தயாரிக்கப்படுகிறது.

**18. அங்காடிகள் வண்டி நிலையம், உந்து வண்டி நிலையம், ஆடுவதைச் சாலை முதலியன ஏதுமில்லை.**

**19. நகரமைப்புப் பிரிவு :**

கூடலூர் முழுமைத்திட்டம் ஏதும் இல்லை.

**நகரமைப்பு பிரிவில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் பின்வருமாறு :**

கூடலூர் நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் ஏதும் இல்லை.

**நகரமைப்புத் திட்டங்கள் :**

கூடலூர் நகராட்சிப் பகுதியில் விரிவு அபிவிருத்தி திட்டம் ஏதும் இல்லை.

**நகரமைப்புப் பிரிவு :**

01.04.2022 முதல் 31.03.2023 வரை நிரந்தர ஆக்கிரமிப்புகள் எதுவும் இல்லை. தற்காலிக ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின்றன.

**பொது இனங்கள் :**

நகரில் பொதுச்சுகாதாரத்தை மேலும் சிறந்த முறையில் வைப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. குடிநீர் விநியோகம் நன்கு செயல்படுகிறது. மேலும், நகரில் பொதுச்சுகாதாரம் சம்பந்தமான அம்சங்களான திடக்கழிவு மேலாண்மை, பொதுக்கழிப்பிடங்கள், கழிவுநீர் கால்வாய்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**01.04.2022 முதல் 31.03.2023 வரை நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விபரம் :**

| வ.எண். | திட்டத்தின் பெயர் | எண்ணிக்கை | மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 15th CFC-2020-2021 திட்டம் | 2 | 55.90 |
| 2 | 15th CFC-2021-2022 திட்டம் (Un tied) | 1 | 46.00 |
| 3 | 15th CFC-2021-2022 திட்டம் (Tied) | 1 | 68.75 |
| 4 | ஆம்ரூட் 2.0 | 1 | 41.00 |
| 5 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் – 2022–23 | 1 | 20.00 |
| 6 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 2022–2023 | 50 | 4.67 |
| 7 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 2022–2023 | 5 | 177.80 |
| 8 | நமக்கு நாமேத் திட்டம் 2021–2022 | 1 | 10.00 |

**1) வீட்டுவரி :**

அறிக்கையாண்டில் சொத்துவரி நடப்பு கேட்பு ரூ.246.42 இலட்சம் தொகையில் ஒவ்வொருவருக்கும் வரி 100% ஆகும். வரிவிதிக்கப்பட்ட கட்டிடங்கள் 15643 ஆகும்.

**2) காலிநில வரி :**

அறிக்கையாண்டில் காலியிட வரியில் நிலுவை மற்றும் நடப்பு கேட்பு ரூ.5.66 இலட்சம் தொகையில் ஒவ்வொருவருக்கும் வரி 100% ஆகும். வரிவிதிக்கப்பட்ட கட்டிடங்கள் 119 ஆகும்.

**மொத்த வரிவிகிதம் :**

2022 – 2023 ஆண்டு வரியினங்கள் (ரூ.இலட்சத்தில்)

| **நிலுவை :** | கேட்பு | வசூல் | நிலுவை | வசூல் சதவீதம் |
|---|---|---|---|---|
| சொத்துவரி (நூலக வரியுடன்) | 50.28 | 50.28 | 0 | 100% |
| காலியிடவரி | 3.67 | 3.67 | 0 | 100% |
| தொழில்வரி | 0.03 | 0.03 | 0 | 100% |
| குடிநீர்க்கட்டணம் | 56.37 | 56.37 | 0 | 100% |
| வரியில்லா இனம் | 0 | 0 | 0 | 0% |
| **நடப்பு :** | | | | |
| சொத்துவரி (நூலக வரியுடன்) | 246.42 | 246.42 | 0 | 100% |
| காலியிடவரி | 1.99 | 1.99 | 0 | 100% |
| தொழில்வரி | 23.96 | 23.96 | 0 | 100% |
| குடிநீர்க்கட்டணம் | 211.62 | 211.62 | 0 | 100% |
| வரியில்லா இனம் | 0 | 0 | 0 | 0 % |

அறிக்கை ஆண்டில் வருமானம் :

சொத்துவரி (வருடத்திற்கு) : **2022–2023** (ரூ.இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| பொதுக்காரியங்களுக்காக வருட வாடகை மதிப்பு | 90% | 221.778 |
| நூலக வரி | 10% | 26.642 |
| **மொத்தம்** | **100%** | **246.42** |

**(3) தொழில்வரி :**

இந்த தலைப்பில் நகராட்சிகள் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சவரி விதிக்கப்பட்டுள்ளது. அரைவருடம் வருமானம் ரூ.**21,000/–**கீழ் உள்ளவற்றிற்கு அரசு புதிய தொழில்வரிச்சட்டம் **59/1992** ன்படி தொழில்வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் தொழில்வரி வரவு ரூ.**23.99** இலட்சம் ஆகும்.

**கல்வி நிலவரி :**

கூடலூர் நகராட்சியில் கல்வி வரி வசூலிக்கப்படுவதில்லை.

**கணினிப்பிரிவு கூடலூர் நகராட்சி 2022–2023 :**

இந்நகராட்சி கணினி பிரிவில் மொத்தம் **12** கணினிகளும், **3** டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டரும், **3** லேசர் பிரிண்டரும் மற்றும் **2** சாதாரண பிரிண்டர்களும் உள்ளன.

நகராட்சியில் பதியப்படும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்த குழந்தைகளின் விபரங்கள் அனைத்தும் கணினியில் பதியப்பட்டு சான்றிதழ்களும் கணினி மூலம் பிரிண்ட் செய்யப்பட்டு காலதாமதம் இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. சான்றிதழ்கள் தமிழ்நாடு அரசின் இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. **01.04.2010** முதல் சொத்துவரி, குடிநீர்க்கட்டணம், தொழில்வரி, வரியில்லா இனங்கள் போன்ற அனைத்து விபரங்களும் கணினியில் பதியப்பட்டு அன்றாடம் வசூலாகும் வரி மற்றும் வரியில்லா இனங்களும் கணினி மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சியின் அனைத்து வரவினங்களுக்கும் கணினி வழி இரசீது வழங்கப்படுகிறது.

**01.04.2010** முதல் நகராட்சியின் வரவு செலவு கணக்குகள் (இரட்டை பதிவு முறையில்) அனைத்து செலவு சீட்டுகளும் (Vouchers) பதியப்பட்டுள்ளன.

கட்டட விண்ணப்பங்களுக்கான அனுமதி மற்றும் கட்டட அனுமதி சான்று கணினி மூலம் வழங்கப்படுகிறது.

நகராட்சி அனைத்து பணியாளர்களுக்கான சம்பளப் பட்டியல் கணிணி மயமாக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக கணிணிப் பிரிவில் மின்னஞ்சல் (E.Mail) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. commr.gudalur-cbe@tn.gov.in என்பது மின்னஞ்சல் முகவரியாகும். நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், ஏனைய நகராட்சிகள் மற்றும் இதர அலுவலகங்களில் இருந்தும் மின்னஞ்சல் மூலம் தபால்கள் உடனுக்குடன்

பெறப்பட்டு அதற்குண்டான பதில்களை மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டும் வருகிறது. இந்நகராட்சியின் இணையதள முகவரி http://www.tnurbantree.tn.gov.in/gudalur-cbe.

தற்போது அனைத்து இன வசூல் விபரங்கள் விபரங்கள் போன்றவை அனைத்தும் Centralised Web Based Software (UTIS) Urban Tree Information System மூலம் அவ்வப்பொழுது நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலங்களில் பார்க்கப்பட்டு வருகிறது. இணையதள முகவரி website: http://www.tnurbaneseva.tn.gov.in கணிணிகள் அனைத்தும் (AMC) வருடாந்திர பராமரிப்பு மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மாதந்தோறும் பொறியியல் பிரிவு பணிகள் முன்னேற்ற அறிக்கைகள், D.C.B Statements மக்கள் தொகை கணக்கெடுப்பு, உள்ளாட்சித்துறை தேர்தல்கள் என பலவகையான பணிகள் அந்தந்த பணியாளர்கள் தாங்களே கணிணிகளை இயக்கி தங்கள் பணிகளை செய்ய உதவித்திட்ட அமைப்பாளர் மூலம் பயிற்சி வழங்கப்பட்டு பணிகள் அனைத்தும் செவ்வனே செய்யப்பட்டு வருகின்றன.

கணினிப்பணிகள் அனைத்தும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் மற்றும் திட்ட அமைப்பாளரால் மாதந்தோறும் முன்னேற்ற அறிக்கை தொடர்பான ஆய்வுக் கூட்டம் மூலம் ஆய்வு செய்யப்பட்டு அவ்வப்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோராலும் ஆய்வுக்கூட்டம் நடத்தி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

| Code No | Description of items | Shedule No. | Current Year Amount(₹) | Previous Year Amount(₹) |
|---|---|---|---|---|
| | **Income** | | | |
| 110 | Tax Revenue | I-1 | 3355426.88 | 0 |
| 130 | Rental Income from Municipal Properties | I-3 | 0 | 0 |
| 140 | Fees & User Charges | I-4 | 14172611 | 0 |
| 160 | Revenue Grants, Contribution and Subsidies | I-6 | 71411204 | 0 |
| 171 | Interest Earned | I-8 | 116645 | 0 |
| 180 | Other Income | I-9 | 168468 | 0 |
| | | **Total** | **89224354.88** | 0 |
| | **Expenditure** | | | |
| 210 | Establishment Expenses | I-10 | 31016334 | 0 |
| 220 | Administrative Expenses | I-11 | 5009936 | 0 |
| 230 | Operations & Maintenance | I-12 | 55503521 | 0 |
| 240 | Interest & Finance Charges | I-13 | 290.5 | 0 |
| 250 | Programme Expenses | I-14 | 789320 | 0 |
| 280 | Prior Period Item | I-18 | -118682 | 0 |
| | | **Total** | **92200719.5** | 0 |
| | **3109002-Gross Deficit of Expenditure over Income** | | **2976364.62** | **0** |

ஆணையாளர்(கூ.பொ)
கூடலூர் நகராட்சி(கோ)